**ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையம் - 2022**

-----------------------------------------------------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று், மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின், 1972 இன் 5 ஆம் இலக்க விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 கொண்ட நிதி அதிகாரசட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிறுவனத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிலையம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிலையத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவனத்தின் அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிலையத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிலையம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.
இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.
- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிலையத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும்,

எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலையத்தின் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிறுவனம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- நிறுவனத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிறுவனத்தின் முன்னால் பணிப்பாளர் ஒருவரினால் அன்பளிப்பு செய்யப்பட்ட ரூபா 742,000 பெறுமதியான கணனியொன்றின் பெறுமதி தவறுதலாக காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் நிலையான சொத்துக் கொள்வனவாக மற்றும் நிதிசார் நடவடிக்கைகளின் கீழ் மூலதன அன்பளிப்பு கிடைப்பனவாக காண்பிக்கப்பட்டிருந்தது. | காசுப்பாய்ச்சல் கூற்றில் நிலையான சொத்துக் கொள்வனவு செய்யும் காசுப்பாய்ச்சல் ரூபா 2,107,135 ஆக காண்பிக்கப்பட்ட போதும் அதில் பொருள் அன்பளிப்பும் உள்ளடங்கியுள்ளது. சரியான பெறுமதி ரூபா 1,381,469 ஆகும். நிதி செயற்பாடுகளின் கீழ் மூலதன நிதி அன்பளிப்பு ரூபா 579,100 ஆன சரியாக வேண்டும். | காசுப்பாய்ச்சல் கூற்றை தயாரிக்கும் போது பணக் கொடுக்கல் வாங்கல்கள் மாத்திரம் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | நெல் விற்பனை சபைக்கு 2020 பெப்ரவரி 07 திகதி முதல் முற்றாக விடுவித்துள்ள சிரேஷ்ட ஆராய்ச்சி அலுவலர் ஒருவருக்கு 2020, 2021 மற்றும் 2022 ஆண்டுகளில் செலுத்திய ரூபா 4,327,214 ஆன சம்பளத்தை நெல் விற்பனை சபையிலிருந்து மீள்நிரப்பிக் கொண்டிருக்காததுடன் அதனை கிடைக்க வேண்டிய பணமாக கணக்குகளில் வெளிப்படுத்தி | ஏற்றுக் கொள்கிறேன். ஹெக்டர் கொப்பேகடுவ மற்றும் நெல் விற்பனை சபை கமநல அமைச்சிற்கு சொந்தமான அரச நிறுவனமாவதுடன் சம்பளம் கொடுப்பனவு அல்லது மீள்நிரப்புதல் தொடர்பாக எவ்வித தீர்மானமும் கட்டுப்பாட்டுச் சபையினால் எடுக்கப்படவில்லை. எனினும் 2022 நவம்பர் மாதம் இடம்பெற்ற கட்டுப்பாட்டுச் சபை தீர்மானத்தின் | விடுவிக்கப்பட்ட அலுவலர்களிட மிருந்து அறவிட வேண்டிய சம்பளத்தை மீள்நிரப்பிக் கொள்ள நடவடிக்கை எடுக்க |

| | | | |
|---|---|---|---|
| | இருக்கவில்லை. | பிரகாரம் 2022 நவம்பர் மாதம் முதல் குறித்த சம்பளத்தை மீள்நிரப்ப கட்டுப்பாட்டுச் சபை அங்கீகாரம் வழங்கியுள்ளது. அதன் பிரகாரம் நெல் விற்பனை சபையினால் குறித்த பணத்தை மீள்நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வேண்டும். |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெற வேண்டிய பணம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சிரேஷ்ட ஆராய்ச்சி அலுவலர் ஒருவர் கலாநிதி (Ph.D) கற்பதற்காக 2011 ஆண்டு முதல் 02 வருட சம்பளத்துடன் கற்கை விடுமுறை மற்றும் இன்னும் 02 வருட சம்பளமற்ற விடுமுறையில் வெளிநாடு சென்று மீண்டும் நிறுவனத்திற்கு கடமைக்கு வந்துள்ள போதும் உடன்படிக்கை பிரகாரம் உரிய காலத்தில் கலாநிதி பட்டத்தை பூர்த்தி செய்து பட்டதாரி சான்றிதழை வழங்க முடியாததன் மீது அவரால் நிறுவனத்துடன் உடன்பட்டுள்ள பிணைமுறி பெறுமதி ரூபா 9,039,682 தொகையை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | குறித்த தொகையை செலுத்துமாறு அந்த சிரேஷ்ட ஆராய்ச்சி அலுவலரிற்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக மேலதிக ஆலோசனைக்காக கட்டுப்பாட்டுச் சபை பத்திரமொன்றை அடுத்த கட்டுப்பாட்டுச் சபை கூட்டத்திற்கு சமர்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | வெளிநாட்டு புலமைபரிசிலிற்கு சென்றுள்ள அலுவலர்களிடமிருந்து உடன்படிக்கை மீறுதல் காரணமாக அறவிட வேண்டிய தொகையை விரைவில் அறவிட வேண்டும். |
| (ஆ) | ஶ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் பட்டப்பிக்படிப்பை கற்பதற்காக சிரேஷ்ட ஆராய்ச்சி பெண் அலுவலர் ஒருவர் நிறுவனத்துடன் கைச்சாதிடப்பட்டுள்ள உடன்படிக்கையில் பட்டதாரி பாடநெறியை பூர்த்தி செய்யும் கால எல்லையை குறிப்பிட்டிருக்காததுடன் 2016 ஏப்ரல் 01 திகதி ஆரம்பித்த பட்டப்படிப்பிற்கு 07 ஆண்டுகள் கடந்திருந்த போதும் மீளாய்வாண்டு இறுதியிலும் பட்டத்தை பூர்த்தி செய்து அச் சான்றிதழை நிறுவனத்திற்கு சமர்பித்திருக்காத காரணத்தால் செலுத்திய ரூபா 223,500 ஆன பாடநெறி கட்டணம் தொகையை மீண்டும் அறவிட்டிருக்கவில்லை. | சிறப்பு ஆராய்ச்சி அலுவலருக்கு கலாநிதி பட்டத்தை பூர்த்தி செய்ய மேலதிக காலமொன்று வழங்கப்பட்டுள்ளது. அக் கால எல்லையினுள் குறித்த பட்டத்தை பூரணப்படுத்த முடியவில்லை எனில் அவரிற்கு செலுத்திய படிகள் மற்றும் சம்பள ஏற்றத்தை அறவிட நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய கால எல்லையினுள் பட்டத்தை பூர்த்தி செய்யாத அலுவலர்களிடமிருந்து உடன்படிக்கை மீறியதன் காரணமாக அறவிட வேண்டிய தொகையை விரைவில் அறவிட வேண்டும். |
| (இ) | சீன பல்பலைக்கழகமொன்றில் கலாநிதி பட்டத்தை பின்பற்ற ஆராய்ச்சி அலுவலரினால் 03 ஆண்டுகள் விடுமுறை பெற்றுக் கொள்ளும் போது நிறுவனத்துடன் கைச்சாதிடப்பட்டிருந்த உடன்படிக்கை பிரகாரம் பட்டத்தை பூர்த்தி செய்து நிறுவனத்திற்கு குறைந்தது 10 | ஆராய்ச்சி அலுவலர் உரிய பிணைமுறி மற்றும் உடன்படிக்கை பிரகாரம் உரிய காலஎல்லையை பூர்த்தி செய்ய முன்னர் நிறுவன சேவையிலிருந்து விலகிச் சென்றுள்ளதால் உடன்படிக்கை பிரகாரம் நிறுவனத்திற்கு அறவிட வேண்டிய தொகையை செலுத்துமாறு அவரிற்கு அறிவித்துள்ள போதும் இதுவரை | வெளிநாட்டு புலமைபரிசிலிற்கு சென்று மீண்டும் வந்து உரிய சேவை காலத்தை பூர்த்தி செய்யாத அலுவலர்களினால் நிறுவனத்திற்கு |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டுகள் சேவையாற்ற வேண்டிய போதும் இரண்டு ஆண்டுகள் சேவையாற்றி 2022 மார்ச் 29 திகதி பணிப்பாளரின் அங்கீகாரத்தின் மீது 2022 ஏப்ரல் 25 திகதி முதல் கிழக்கு பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர் பதவிக்காக நிறுவன கடமைகளில் இருந்து விடுவிக்கப்பட்டிருந்தது. எனினும் அவரிடமிருந்து நிறுவனத்திற்கு அறவிட வேண்டிய ரூபா 5,272,016 தொகையை மீளாய்வாண்டு இறுதியிலும் அறவிட்டிருக்கவில்லை. | அத்தொகையை செலுத்தவில்லை. அவரிடமிருந்து அத்தொகையை அறவிட அவரிற்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு முன்நடவடிக்கைக்காக சமர்பிக்கப்பட்டுள்ளது. | செலுத்த வேண்டிய தொகையை அறவிட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிக்கு ரூபா 18,131,898 ஆன வெளிநாட்டு புலமை பரிசில் கடன்படுனர் மீதியினுள் 06 அலுவலர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 12,859,882 ஆன தொகை 10 ஆண்டுகளிற்கு அதிக காலமாக நிலவி வருவதுடன் அத் தொகையை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2021 திசெம்பர் 31 திகதி நிறுவனத்தில் 2002 ஆண்டிற்கு முன்னரிலிருந்து நிலவி வரும் வெளிநாட்டு புலமைப் பரிசிலாளர் 06 கடன்படுனர்களிடமிருந்து ரூபா 12,859,881 தொகை அறவிட வேண்டியதாக காணப்பட்டது. 05 பேர்களின் நிகழ்கால முகவரியை கண்டறிய முடியாததால் கடனை அறவிடும் முன்நடவடிக்கை மேற்கொள்ள முடியாதுள்ளதுடன் ஏனைய அலுவலரிடமிருந்து அறவிட வேண்டிய தொகையை 2011.11.23 திகதி வழங்கிய வழக்கு தீர்ப்பு பிரகாரம் அறவிட எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கிறேன். | அறவிட வேண்டிய மீதிகளை தாமதமின்றி அறவிட வேண்டும். |
| (உ) | அமைச்சரின் பாதுகாப்பு அலுவலர்களுக்கு தங்குமிட அறை வாடகைக்கு வழங்கியதற்காக 2015 மே முதல் 2018 ஜுலை வரையான காலத்திற்கு அறவிட வேண்டிய ரூபா 8,895,470 ஆன தொகையை அறவிட எவ்வித நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. | அதன் போதைய கமநல அமைச்சிரின் வாய்மூல கட்டளையின் பிரகாரம் அமைச்சரின் பாதுகாப்பு அலுவலர்களுக்கு தங்குமிட அறை வழங்கியிருந்ததுடன் அதற்காக பட்டியல் (Invoice) விநியோகிக்கப்படவில்லை. குறித்த தங்குமிடம் பெற்றுக் கொண்ட அலுவலர்களின் தகவல்களையும் கண்டறிய கடினமாகவுள்ளதுடன் அத் தொகையை அறவிட வேண்டிய பொறுப்புவாய்ந்த அலுவலர்களையும் கண்டறிய முடியாதுள்ளது. அதன் போதிருந்த பணிப்பாளரின் வாய்மூல ஆலோசனை பிரகாரம் இவ்வறைகள் வழங்கப்பட்டுள்ளது. | அறவிட வேண்டிய மீதியை தாமதமின்றி அறவிட வேண்டும். தங்குமிடத்தினால் பேணிச் செல்லும் பதிவேட்டில் தங்கும் அலுவலர்களின் அல்லது ஊழியர்களின் விபரமான தகவல்களை உள்ளிட்டு பேணிச் செல்ல வேண்டும். |
| (ஊ) | நிறுனத்தின் NIKON D 3100 வகை கெமரா காணமல் போனது தொடர்பாக முறையான ஒழுக்காற்றுக் குழுவின் பரிந்துரை பிரகாரம் அதன் ரூபா 29,086 ஆன முழு நட்டத்தையும் முன்னால் பணிப்பாளர் பொறுப்பேற்க வேண்டியதாக பரிந்துரைத்துள்ள போதும் அத் தொகையை அறவிட எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | நி.பி. 104 விசாரணையின் பிரகாரம் அதற்காக பொறுப்பாக முன்னால் பணிப்பாளர் பெயரிடப்பட்டுள்ளார். அவரிற்கு இது தொடர்பாக பல சந்தர்ப்பங்களில் அறிவித்துள்ளதுடன் இது வரை பதில் வழங்கவில்லை. அவரிடமிருந்து அறவிட வேண்டிய தொகை ரூபா 29,086 ஆவதுடன் சட்டரீதியாக நடவடிக்கை எடுத்து அறவிட எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்க எதிர்பார்க்கிறேன். | அறவிட வேண்டிய மீதியை தாமதமின்றி அறவிட வேண்டம். |
| (எ) | ஏனைய கடன்படுனர் மீதியினுள் | மொபிடல் நிறுவனத்திடமிருந்து அறவிட | அறவிட வேண்டிய |

| | | |
|---|---|---|
| காணப்படும் ரூபா 737,423 ஆன மீதி 05 ஆண்டுகளாக நிலவிவருவதுடன் அத் தொகையை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வேண்டிய தொகையை விரைவில செலுத்த உடன்பட்டுள்ளனர். கிடைக்க வேண்டிய தங்குமிட வருமானம், கிடைக்க வேண்டிய கேட்போர் கூட வருமானம் மற்றும் பொது நிர்வாக அமைச்சிடமிருந்து கிடைக்க வேண்டிய வருமானத்தை எதிர்காலத்தில் நடாத்தவுள்ள கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவிற்கு சமர்பித்து முன்நடவடிக்கைக்காக பரிந்துரை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். நிறுவனத்திலிருந்து நீங்கிய ஊழியர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய மீதிகளை அறவிட சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு சமர்பிக்கப்பட்டுள்ளது. | மீதியை தாமதமின்றி அறவிட வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக் கோவையின் XV ஆம் அத்தியாயத்தின் 5.1 பிரிவு | கற்கை அல்லது பயிற்ச்சிக்காக குறைந்தது பிரயாணத்திற்கு செலவாகும் காலமும் உள்ளிட்டதாக ஒரு மாதத்திற்கு அதிக காலம் சம்பளமற்ற விடுமுறை பெற்று வெளிநாடு செல்லும் அலுவலர் ஒருவர் அவ்விடுமுறை முடிவடைந்து கடமைக்கு வருவதாகவும் அவரால் பெற்றுக் கொள்ளப்பட்ட சம்பளமற்ற காலத்தை போன்று இரு மடங்கிற்கு சமமான காலமொன்று அரசாங்கத்திற்கு சேவையாற்றுவதாக உடன்படிக்கை செய்ய வேண்டிய போதும் 2021 செப்டம்பர் 25 திகதி முதல் 2022 செப்டம்பர் 10 திகதி வரை ஐக்கிய இராச்சியத்தில் பட்டப்பின் படிக்பை கற்பதற்காக ஓராண்டு காலத்திற்கு வெளிநாடு சென்ற ஆராய்ச்சி உத்தியோகத்தர் ஒருவருடன் அவ்வாறான உடன்படிக்கையொன்று கைச்சாதிடப்பட்டிருக்கவில்லை. | ஆராய்ச்சி உத்தியோகத்தர் தற்போது சேவையிலிருந்து கேட்டு விலகியுள்ளதுடன் பிணைமுறி மற்றும் உடன்படிக்கை கைச்சாத்திடாததால் தாபன விதிக்கோவை ஏற்பாடுகள் பிரகாரம் அவரிடமிருந்து அறவிட வேண்டிய தொகையில் ஒரு பகுதியை அறவிட்டுள்ளதுடன் (பணிக்கொடை தொகையிலிருந்து) இன்னுமொரு நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 71,206 தொகை எஞ்சியுள்ளது. அத்தொகையை செலுத்துமாறு அவரிற்கு அறிவித்துள்ளதுடன் குறித்த தொகையை செலுத்தவில்லை எனில் சட்ட பிரகாரம் அறவிட நடவடிக்கை எடுக்கப்படும். | அலுவலரிடமிருந்து அல்லது பிணையாளியிடமிருந்து குறித்த தொகையை அறவிட வேண்டும். இவ்வாறான தவறை மீண்டும் செய்யக்கூடாது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | xix ஆம் அத்தியாயத்தின் 5.8 பிரிவு | பதிவாளர் உத்தியோகபூர்வ இல்லத்தில் நீர் தொடர்பை நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையினால் 2018 மே 14 திகதி துண்டித்ததால் அத் திகதி முதல் அவ் உத்தியோகபூர்வ இல்லத்திற்கு குறித்த வழங்களினால் விநியோகித்து அதற்காக நிறுவனத்தினால் வடிகாலமைப்பு சபைக்கு கட்டணம் செலுத்தியிருந்த போதும் 2018 மே 14 திகதி முதல் 2022 திசெம்பர் 31 திகதி வரை நிறுவன்த்தினால் செலுத்திய தொகையை குறித்த அலுவலரிடமிருந்து மீள்நிரப்பிக் கொண்டிருக்கவில்லை. | 02 உத்தியகப்பூர்வ இல்லங்களுக்காக புதிய மின் மற்றும் நீர் மானிகள் பொருத்தியுள்ளதுடன் உரியவாறு குறித்த உதிதியோகத்தரிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுத்துள்ளது. | உத்தியகப்பூர்வ இல்லங்களை பயன்படுத்தும் உதிதியோகத்தர்கலிடமிருந்து செலுத்தாத மின் மற்றும் நீரிற்காக அரசிற்கு அறவிட வேண்டிய தொகையை மீள்நிரப்பிக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) (i) | இலங்கை சனநாகய சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நி.பி. 104 | ரூபா 1,067,150 ஆன உயிர் வாயு கருத்திட்டம் 2016 ஆண்டு முதல செயளற்றதை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் பின்னர் 2022 ஜுன் 23 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்த டெண்டர் குழு அறிக்கையின் பிரகாரம் முன்னைய பணிப்பாளர் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களும் தொடர்புபட்டு டெண்டர் முறைமையை மீறி மேலதிக உறுதிபாகங்கள் கொள்வனவு செய்து பொருத்துவததனால், அதன் செயற்பாட்டுக்கு தடையானது என முடிவு செய்து இருந்த பொதும் அந் நட்டத்ததை அறவிட நடவடிக்கை எடுத்திருக்வில்லை. | கட்டுப்பாட்டு சபையின் ஆலோசனை பிரகாரம் அந்த உயிர் வாயு கருத்திட்டத்தை மீண்டும் செயற்படுத்தவதற்காக தேவையான திருத்தம் செய்வதற்கு அதிப்பீட்டு அறிக்கையொன்று குறித்த கருத்திட்டத்தை ம்ேற்கொண்ட நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்ளுமாறு அறிவித்துள்ளதடன் அதன் பிரகாரம் மேற் குறிப்பட்ட கம்பனியால் மதிப்பீட்டறிக்கையொன்று சமர்ப்பித்துள்ளது. அந்த அறிக்கையை கட்டப்பாட்ட சபைக்கு அனுப்புவதுடன்எதிர்கால நடவடிக்கைகள் கட்டப்பாட்டு சபையின் அறிவுரைகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | தாமதமின்றி பரிசோதனை குழுவின் அறிக்கையை பெற்றுக்கொண்டு அதன் பரிந்துரை செயற்படுத்த வேண்டும். |
| (ii) | நி.பி. 1646 | 07 வாகங்க்குரிய ஓட்டக்குறிப்புகளின் மாதாந்த பொழிப்பு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | நி.பி.1646 பிரகாரம் மாதாந்த பொழிப்பு மற்றும் தின ஓட்டக் குறிப்பு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்துள்ளது | நிதிப்பிரமாணம் பிரகாரம் மாதாந்த பொழிப்பு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு |

சமர்ப்பிக்க
வேண்டும்.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி பெறுபேறு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிகூற்றின் பிரகாரம், மீளாய்வாண்டின் நிறுவனத்தின் செயற்பாட்டு பெறுபேறு ரூபா 5,391,622 ஆன மிகையொன்றானதுடன் அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 12,133,601 ஆனதால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் ரூபா 6,741,979 ஆன மிகையின் குறைவொண்று அவதானிக்கப்பட்டது. ஏனைய செலவுகள் ரூபா 10,250,745 இனால் அதிகரித்தல், ஆராய்ச்சி மற்றும் பயிற்றுவித்தல் செலவினம் ரூபா 5,135,144 இனால், சம்பள மற்றும் வேதனம் ரூபா 9,447,716 இனால் அதிகரித்தல் இந்நிதி பெறுபேறுகள் மீது பிரதான தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களில் போக்கு பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் மீளாய்வாண்டை ஒப்பிடம் போது அரச மானியம் மற்றும் மூலதன மானியம் முறையே 3.6 மற்றும் 66.7 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதடன் ஏனைய வருமானம் 32 சதவீதத்தினால் மற்றும் ஆராய்ச்சி மற்றும் பயிற்றுவித்தலுக்காக ஏனைய் தரப்பனரிடமிருந்து கிடைத்த நிதியம் 735.6 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. அவ்வாறே ஆராய்ச்சி மற்றும் பயிற்றுவித்தல் செலவினம் 66.7 சதவீதத்தினாலும், ஏனைய தரப்பனரிற்காக ஆராய்ச்சி மற்றும் பயிற்றுவித்தல் செலவினம் 735.6 சதவீதத்தினாலும் மற்றும் ஏனைய செலவினம் 36.2 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுக்கு ஒப்பாக மீளாய்வாண்டின் வருமான மிகை விகிதம் 3.7 சதவீதத்தினால் குறைந்திருந்ததுடன் நடைமுறை விகிதம் மற்றும் துரித சொத்துக்கள் விகிதம் முறையே 0.23 சதவீதத்தினால் மற்றும் 0.17 சதவீதத்தினால் குறைந்திருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2022 சனவரி 25 ஆந் திகதிய சொத்தக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை இலக்கம் 04/2022 பிரகாரம் ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்டுள்ள 03 வாகணங்களை மற்றும் 04 மோடார் சைகில்களை திருத்தி பயன்படுத்த அல்லது பராதீனம் செய்யவேனும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிறுவனத்தில் ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்டுள்ள 03 வாகனங்களை மீண்டும் திருத்த தீர்மானித்துள்ளதடன் ஏற்பாடு கிடைக்கும் அளவின் பிரகாரம் படிப் படியாக அவ் வாகனங்களை திருத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.<br>நான்கு மோடார் சைக்கில்களில் ஒரு சைக்கல் ஓட்ட நிலையில் காணப்படுவதுடன் எஞ்சிய 03 சைக்கில்களையும் பராதீனம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | இந்த வாகணங்களை திருத்தி பயன்படுத்த அல்லது திருத்த முடியாது எனில் பராதீனம் செய்ய வேண்டும். |